எம்.சி.ஓ.பி எண்: 3682/2021 தேதி: 11.12.2025

மசா. : 2

பெயர் : செல்வராஜ்

த/பெ. : தங்கவேல்

வயது : 58

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய பெயர் செல்வராஜ். என்னுடைய அப்பா பெயர் தங்கவேல். என் தாத்தா பெயர் அண்ணாமலை. எனக்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சம்மன் எதுவும் வரவில்லை. குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சி சொல்லவில்லை. எனக்கு சொந்த ஊர் பட்டாளம். நம்பர் 10 கனகராய தோட்டம், பட்டாளம் சென்னை–12. விபத்தில் இறந்தவர் பெயர் சின்னசாமி. அவருடைய அப்பா பெயர் தெரியாது. அவருடைய அப்பா பெயரும் தங்கவேல் தான் என்றால் தெரியாது. இந்த விபத்தில் இறந்த சின்னசாமிக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. சின்னசாமி பிள்ளை அஜித் வழக்கை தாக்கல் செய்தார் என்றால் தெரியும். அவருடைய முகவரியும் பட்டாளம் என்றால் சரி. சின்னசாமியும் சூளை பட்டாளம் ஏரியாவில்தான் ஆட்டோ ஓட்டினார் என்றால் ஆமாம். ஸ்டாண்டில் இருப்பதால் மீட்டீங் அட்டன் செய்வோம். அதனால் தெரியும். இறந்த என்னடைய தம்பி சின்னசாமி டிஎல் இல்லாமல் விபத்து தேதியில் வாகனத்தை ஓட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் என்னுடைய இறந்த தம்பி சின்னசாமியும் சூளை பட்டாளம் ஏரியாவில்தான் ஆட்டோ ஓட்டி வந்தோம் என்றால் அவர் தம்பி இல்லை. நான் எங்குவேண்டுமானாலும் சவாரி செல்வேன். முதல் தகவல் அறிக்கையில் நான் புகார் கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் இல்லை. அதில் அனுப்புநர் பெயர் டி. செல்லவராஜ் . த/பெ, தங்கவேலு என காணப்படுகிறது என்றால் எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த சத்தியபிரமாணவாக்குமூலத்தில் எனக்கு படிக்க தெரியாது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் விழுப்புரம் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தேன். முண்டியம் பாக்கம்ரோட்டில் சென்றுகொண்டிருந்தேன். முண்டியம் பாக்கம் சாலையில்தான் விபத்து நடந்தது. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள படி விபத்து நடந்துள்ளதா என்றால் அது பற்றி தெரியாது.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பெயரில் குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.